**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.260/2019**

**PW-2**

**Date :-27.05.2025**

**பெயர் .திரு. வினோத் த/பெ. தமிழ்செல்வன் . (வயது 32/2025)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

**நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தைதான் போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான் . சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் தேசிய நெடுஞ்சாலை சற்று வளைவான இடம் என்றால் சரிதான் . இறந்துபோன நபர் எனது பக்கத்து வீட்டுகாரர் , இந்த வழக்கின் அ .சா. 1 எனது அண்ணன் அ .சா.2 தவசிமணி எனது நண்பர்.சம்பவ நடந்ததான சொல்லக்கூடிய இடத்திலிருந்து காவல்காரன் பாளையம் சுமார் 1/2 கிலோமீட்டர் தூரம் இருக்கும் . காவல்காரண் பாளையத்தில் இருந்து சிறுகமணி வரவேண்டும் என்றால் சாலையை குறுக்கே கடந்துதான் வரவேண்டும் என்றால் சரிதான் . அன்றையதினம் விபத்தல் அடிப்பட்ட நபர் சிவன்கோவில் செல்வதற்கான சாலையை கடந்தவந்தார் என்றால் சரிதான் . பொதுவாக சாலையை கடக்க கூடிய நபர் சாலையை இருபுறமும் கவனித்து வாகனம் எதுவும் வரவில்லை என்று தெரிந்தபிறகுதான் சாலையை கடக்க வேண்டும் என்றால் சரிதான் . அன்றைய தினம் இறந்துபோன நபர் சாலையை கவனித்து கடந்து இருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான் . போலீசார் விசாரித்தபோது அ .சா.2 தவசிமணி சம்பவ இடத்தில் இருந்ததாகவோ , சம்பவத்தை பார்த்தாகவோ வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்தபோனவரின் அஜாக்கிரதையால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் ஆமாம் . அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**Sd/-xxxx**

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

**Sd/-xxxx**

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**
**CC.No.260/2019**

**PW-1**

Date :-27.05.2025

பெயர் .திரு. ராஜா த/பெ. ஜெயராம். (வயது 44/2025)

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

என் முதல் விசாரணையில் கூறிய விவரத்தைதான் போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான் . சம்பவ இடம் தேசி யநெடுஞ்சாலை சற்று வளைவான பகுதி என்றால் சரிதான் . சம்பவ இடத்தின் வழியாகதான் நுற்றுக்கானக்கான வாகனங்கள் செல்லும் என்றால் சரிதான் . இந்த விபத்து சம்பந்தமாக எனக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று புகார் மற்றும் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால்சரியல்ல. சாட்சிகள் வினோத், தவசிமணி ஆகியோர் எனது நண்பர்கள். புகாரில் வினோத், மற்றும் தவசிமணி போன் மூலமாக தகவல் கூறியதாக சொல்லியுள்ளோனா என்றால் சொல்லவில்லை . பொதுவாக சாலையை கடக்ககூடிய நபர்கள் சாலையின் இருபுறமும்கவனித்து வாகணம் எதவும் வரவில்லை என்று தெரிந்தபின்புதான் சாலையை கடக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான் . எனது புகார் மற்றும் வாக்குமூலத்தில் இறந்துபோன எனத பெரியம்மா சாலையின் இருபுறமும்கவனித்து வாகணம் எதவும் வரவில்லை என்ற பின்புதான் சாலையை கடந்ததாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான் . பொதுவாக பள்ளி கல்லூரி வாகனங்களுக்கு வேகமாக செல்லமுடியாத அளவிற்கு வேகக்கட்டுபாட்டு கருவியானது பொருத்தப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரிதான் . விபத்து பின்னிட்டுநான் அரசு மருத்துவமனை சென்றேன் அங்கு வந்த போலீசார் அன்றைய தினமே

போலீசார் விசாரித்து புகார் பெற்றுக்கொண்டார்கள் . இறந்துபோன எனது பெரியம்மா சாலையை சரிவர கவனிக்காமல்கடந்தபோதுதான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான் . இழுப்பீடு கிடைக்கவேண்டும்என்று பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Sd/–xxxx**

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

**Sd/–xxxx**

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.